# புதுச்சேரியில் காவலர்கள் வீர வணக்க நாள்: முதல்வர் ரங்கசாமி,அமைச்சர் நமச்சிவாயம் பங்கேற்பு



**புதுச்சேரி அக்.22**

நாடு முழுவதும் பாதுகாப்பு பணியின் போது வீர தீர செயலில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த காவலர்களின் நினைவை போற்றும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் 21ஆம் நாள் காவலர் வீர வணக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது.

இதை அடுத்து புதுவையில் காவலர் வீரவணக்க நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது புதுச்சேரி கோரிமேடு காவலர் மைதானத்தில் நடைபெற்ற இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் முதல்வர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் பங்கேற்று வீர மரணம் அடைந்த காவலர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மலர் டிவி காவலர்களுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

பின்பு நடைபெற்ற காவலர் அணிவகுப்பு மரியாதையும் ஏற்றுக்கொண்டனர் நிறைவாக பணியின் போது உயிர் நீத்த காவலர்களின் நினைவாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அரசு கொறடா ஏ கே டி ஆறுமுகம்,தலைமைச் செயலாளர் சரத் சவுகான், காவல்துறை இயக்குனர் ஷாலினி சிங், அரசு செயலர் கேசவன், ஐஜி அஜித்குமார் சிங்லா உட்பட முதுநிலை காவல் கண்காணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் உட்பட ஏராளமான காவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூரில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம்: கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடந்தது



**கடலூர் அக்.22**

கடலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைகேட்பு நாள் கூட்டம் அனைத்துத் துறை அலுவலர்களுடன் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குடும்ப அட்டை, முதியோர் உதவித் தொகை, மாற்றுதிறனாளிகள் உதவித் தொகை, பட்டா மனுக்களை பொதுமக்கள் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் , அவர்களிடம் நேரில் அளித்தனர்.

இன்று நடைபெற்ற குறைதீர்வு கூட்டத்தில் இலவச பட்டா, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, ஆக்கிரமிப்பு, முதியோர் உதவித்தொகை, குழந்தைகள் கல்வி உதவித்தொகை, இலவச வீடு, தையல் இயந்திரம் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பாக மொத்தம் 578 மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பொதுமக்கள் அளித்த மனுக்களை தீர ஆராய்ந்தும், களஆய்வு செய்தும், விதிமுறைகளுக்குட்பட்டும் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு தீர்வு வழங்க வேண்டும், மேலும் உதவித்தொகை, கழிப்பறை, வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தான மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து தீர்வு காணவேண்டும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது காலம் தாழ்த்தாமல் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கலெக்டர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், தனித்துறை ஆட்சியர் ரமா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் லதா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## புதுச்சேரி அடுத்த நவாமால்கப்பேரில்

# அதிமுக 53-வது ஆண்டு துவக்கவிழா: இனிப்பு, அன்னதானம் வழங்கி கொண்டாட்டம்



**புதுச்சேரி அக். 22**

புதுச்சேரி அடுத்த தமிழக பகுதியான கண்டமங்கலம் நவாம நவாமல்காப்பேர் பகுதியில் கண்டமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல். கே. கண்ணன் முன்னேற்பாடுகளில் ஒன்றான நவாமால்காப் பேர் பகுதியில் கண்டமங்கலம் ஒன்றிய மகளிர் அணி செயலாளர் மயிலி அய்யப்பன் தலைமையில் அதிமுக 53 ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு முன்னாள் முதல்வர்களும் அதிமுக நிர்வாகியுமான புரட்சித் தலைவர் எம் ஜி ஆர், முன்னாள் தமிழக முதல்வரும் புரட்சித்தலைவியுமான செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோர்களின் திரு உருவ படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகளை வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கிளைக் கழக நிர்வாகிகள் கலியபெருமாள் பச்சையப்பன் வைத்தியலிங்கம் முத்து கிருஷ்ணன் கண்ணப்பன் கலியமூர்த்தி எத்திராஜ் காண்டீபன் ராஜா ஞானவேல் இரிச்சப்பன் சங்கர் தமிழ் மணி மணி கண்ணன் அஞ்சாலாட்சி முருகையன் அழகு குப்புசாமி செந்தில்குமார் சஞ்சீவி ஆனந்தன் முருகன் சேகர் லோகேஷ் மற்றும் நவமால்காப்பேர் ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அதிமுக புகழ் ஓங்குக என்ற கோஷம் எழுப்பினர்.

## செங்கம் முத்தமிழ் மன்றம் சார்பில்

# சிந்து வெளி அகழாய்வு நூற்றாண்டு கருத்தரங்கம்

**செங்கம் அக்.22**

செங்கம் முத்தமிழ் மன்றம் சார்பில் சிந்து வெளி அகழாய்வு நூற்றாண்டு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் ராமராகவன் தலைமை தாங்கினார். ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி மாணிக்கம் மன்ற கௌரவத் தலைவர் முருக மணி முன்னிலை வகித்தனர். முன்னதாக செயலாளர் தமிழ் மதி என்கிற மணிவண்ணன் வரவேற்றார்.

முடிவில் பொருளாளர் பேராசிரியர் தமிழன்பிரபு நன்றி கூறியும் பேசினர்.

விழாவில் சிறப்பு பேச்சாளராக சிந்து சமவெளி பண்பாட்டு விழுமியங்கள் என்ற தலைப்பில் தமிழ்நாடு தொன்மையியல் ஆய்வு நிறுவன செயலாளரும் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் பேராசிரியருமான மோகன் காந்தி பேசினார். விழாவினை வாழ்த்தி திருப்பத்தூர் காணி நிலம் முனுசாமி பேசினார்.


விழாவில் வாசகர் வட்ட துணைத்தலைவர் அரங்கன் மணிமாறன் பொருளாளர் அப்துல்வாஹித் முன்னாள் தலைமை ஆசிரியர்கள் பொன் லோகாஜனந்தம் வெங்கடேசன் ரெட்கிராஸ் பொருளாளர் ஆதவன் திரைப்பட இணை இயக்குனர் செல்ல முருகன் தடவியல் துறை அலுவலர் குமரேசன் நூலகர் தமிழ்ச்செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மரணமடைந்த தினபூமி நாளிதழ் நிறுவனர் மணிமாறன் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# விழுப்புரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக வாய்க்கால்கள் தூர்வாரும் பணி

## கலெக்டர் சி.பழனி ஆய்வு



**விழுப்புரம் அக்.22**

விழுப்புரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஜானகிபுரம் டி.எஸ்.ஆர் நகர் மற்றும் தந்தை பெரியார் நகர் பகுதி ஆகிய பகுதிகளில் வாய்க்கால் தூர்வாரும் பணி மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை கலெக்டர் டாக்டர் சி.பழனி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் தெரிவிக்கையில் விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ளும் விதமாக அனைத்து முன்னேற்பாடு பணிகள் அனைத்துத்துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் நகராட்சியில் மழைநீர் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் ஜானகிபுரம் பகுதி மற்றும் டி.எஸ்.நகர் பகுதியில் உள்ள வாய்க்கால்களை நேரில் பார்வையிட்டதுடன் வாய்க்கால் செல்லும் பகுதிகள் முழுவதும் முழுமையாக தூர்வாரிட நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தந்தை பெரியார் நகர் பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன் பொதுமக்களிடம் மழைநீர் மற்றும் நன்னீர் தேங்காத வகையில் வீடு மற்றும் தங்கள் சுற்றுப்புற பகுதியில் உள்ள டயர் கொட்டாங்குச்சி ஆட்டுக்கல் குப்பைத் தொட்டி போன்றவற்றில் நீர் தேங்கவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார்.

ஆய்வின்போது விழுப்புரம் நகராட்சி ஆணையர் வீரமுத்துக்குமார் நகர்நல அலுவலர் மரு.ஸ்ரீப்ரியா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# சிங்கவரம் ரங்கநாதர் கோவிலில் 2 ஜோடிகளுக்கு இலவச திருமணம்



**செஞ்சி,அக்.22-**

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நேற்று தமிழக முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு இடங்களில் இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டனர் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் 31 இலவச திருமணங்களை முதல்வர் ஸ்டாலின் நடத்தி வைத்தார். அதன்படி விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள சிங்கவரம் ரங்கநாதர் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இரண்டு ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

செஞ்சியை அடுத்த மேலச்சேரியை சேர்ந்த வெற்றி வேந்தன் மற்றும் பேபி ஷாலினி ஆகிய ஜோடிகளுக்கும் வடபாலை கிராமத்தை சேர்ந்த வசந்த் -சங்கீதா ஆகிய ஜோடிகளுக்கும் இலவச திருமணம் கோவிலில் நடத்தி வைக்கப்பட்டு அவர்களுக்கு 4 கிராம் தங்கத் தாலி மற்றும் ரூ 60 ஆயிரம் மதிப்புள்ள கட்டில் மெத்தை பீரோ உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் உதவி ஆணையர் ஜீவானந்தம் ஆய்வாளர் சங்கீதா சிங்கவர ரங்கநாதர் கோவில் மேலாளர் இளங்கீர்த்தி மற்றும் மணமக்களின் பெற்றோர்கள் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் மாநில அளவிலான கராத்தே போட்டி மற்றும் பரிசு வழங்கும் விழா

## திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.பிரபாகரன் பங்கேற்பு



**புதுச்சேரி அக 22,**

புதுவையில் மாநில அளவிலான கராத்தே போட்டிகள் மற்றும் பிளாக் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. புதுவையில் அகில இந்திய அஜன் ஸ்கான் கோஜி காய் கராத்தே பயிற்சி பள்ளியின் சார்பில் சார்பில் மாநில அளவிலான கராத்தே போட்டிகள் மற்றும் பிளாக் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா புதுச்சேரி கவுண்டம்பாளையம் முத்து ரத்தின அரங்கம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 300 க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இதன் துவக்க விழாவில் புதுச்சேரி திராவிட முன்னேற்றக் கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் திரு பிரபாகரன் , முத்து ரத்தின அரங்கம் மேல்நிலைப்பள்ளியின் தலைமை நிர்வாக அதிகாரி திரு கராத்தே சுந்தர்ராஜன் , சேலஞ்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் திரு சம்பத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கராத்தே போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

மேலும் கராத்தே மாணவ மாணவியர்களுக்கு பிளாக் பெல்ட் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள். மேலும் இவ்விழாவில் ஆசிய கராத்தே நடுவரும் , அஜன் ஸ்கான் கோஜி காய் கராத்தே பயிற்சி பள்ளியின் தொழில்நுட்ப வல்லுநருமான கராத்தே அழகப்பன் , தலைமை பயிற்சியாளர் ரென்ஷி குமரன் மற்றும் பயிற்சியாளர்கள் சென்சாய் முருகன், சென்சாய் ராஜேஷ் , சென்சாய் ராமராஜா, சென்சாய் கிளாரா, சென்சாய் ரேவதி, சென்சாய் ஏழுமலை, சென்சாய் மதன்ராஜ், சென்சாய் விஜி தினேஷ் , சென்சாய் தினேஷ் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினார்கள்

# அரட்டவாடி மேல்நிலை பள்ளியில் தமிழ் மன்ற விழா



**செங்கம் அக்.22**

செங்கம் ஒன்றியம் அரட்டவாடி அரசு மேல்நிலை பள்ளியில் அனைத்து மன்றங்கள் மற்றும் தமிழ் மன்ற விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு தலைமை ஆசிரியர் சதாசிவம் தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர் மஞ்சுளா முன்னிலை வகித்தார். முதுகலை தமிழ் ஆசிரியர் அரங்கன் மணிமாறன் வரவேற்றுப் பேசினார். சிறப்பு பேச்சாளராக ஆரணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆசிரியரும் எழுத்தாளருமான பவித்ரா நந்தகுமார் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து பேசினார். முடிவில் ஆசிரியர் கார்த்திக் நன்றி கூறினார். கூட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

# கோணை எட்டியம்மன் ஆலய கும்பாபிஷேகம்



**செஞ்சி,அக் 22.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்துள்ள கோணை கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ எட்டியம்மன் ஆலயநூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் திங்கள்கிழமை நடைபெற்றது.

சிலை வைத்து வழிபாடு நடைபெற்ற வந்த நிலையில் தற்போது கோபுர கலசத்துடன் புதிய கோயில் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் புதிய விக்கரங்களும் அமைய பெற்றுள்ளது. கோயில் கட்டி முடிப்பட்ட நிலையில் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 19}ஆம் தேதி மங்கள இசையுடன் சிலைகள் கரிகோலம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து விக்னேஸ்வர பூஜை, எஜமான மஹா சங்கல்பம், புண்யாக வாசனம், கோபூஜை, கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம், லட்சுமி ஹோமம், சுவாமி விக்ரஹங்களுக்கு கண் திறத்தல் ஆகியவை நடைபெற்றது. தொடர்ந்து அஷ்பந்தன மருந்து சாற்றுதல் நடைபெற்றது.

20-ம் தேதி கணபதி ஹோமம், வருண ஆராதனம், சங்கல்பம், வாஸ்துசாந்தி, பிரவேசபலி, புற்று மண் எடுத்தல், காப்பு கட்டுதல், கும்பாலங்காரத்தை தொடர்ந்து யாகசாலையில் கடங்கள் எழுந்தருளி யாகசாலை பூஜைகள் தொடங்கியது. 108 மூலைகை பொருட்கள் ஹோமம், வஸ்திராஹீதி, பூர்ணாஹிதி நடைபெற்றது.திங்கள்கிழமை காலை பூர்ணாஹீதி யாத்ராதனம் தொடர்ந்து கடங்கள் புறப்பாடு நடைபெற்று விமான கோபுர கலசத்தில் புனித ஊற்றப்பட்டு கும்பாபிஷேம் நடைபெற்றது. தொடர்ந்து மூலவர் ஸ்ரீவிநாயகர், ஸ்ரீஎட்டியம்மன், ஸ்ரீஅம்மச்சாரம்மன், ஸ்ரீசப்தகன்னி, ஸ்ரீவீரன் ஆகிய தெய்வங்களுக்கு புனித நீரை ஊற்றி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் ஸ்ரீஎட்டியம்மன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு சிறப்பு மலர் அலங்காம் செய்விக்கப்பெற்று மஹா தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் செஞ்சி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஆர்.விஜயகுமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அரங்க.ஏழுமலை, தொழில் அதிபர் ஆர்.கே.ஜி.ரமேஷ் உள்ளிட்ட கோணை மற்றும் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். விழா ஏற்பாடுகளை ஸ்ரீஎட்டியம்மன் குலதெய்வ வழிபாட்டு வகையராக்கள் மற்றும் கோணை கிராம பொது மக்கள் செய்திருந்தனர்.

## ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம்

# குட்டகரை ஊராட்சியில் சிமெண்ட் சாலை பணி: கலெக்டர் தெ.பாஸ்கரபாண்டியன் தொடங்கி வைத்தார்



**கலசபாக்கம், அக்.22-**

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் மற்றும் செங்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மலைவாழ் மக்களின் கோரிக்கையை ஏற்று தனி வட்டமாக துவக்கப்பட்டு அரசின் சார்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

ஜவ்வாதுமலை காப்புக்காடு பகுதியாக உள்ளதால் பல கிராமங்கள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. பல்வேறு இடங்களில் சாலை வசதியின்றி உள்ளது. தமிழக அரசு சாலை வசதிக்கு நிதி ஒதுக்கினாலும் வனத்துறை அனுமதி கிடைக்காமல் சாலை போடப்படாமல் உள்ளது. இந்நிலையில் ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட குட்டக்கரை மலைவாழ் கிராமத்திலிருந்து பெரியவல்லி, பாதிரி, பாட்டன்கோவிலூர் ஆகிய கிராமங்கள் 3 கி.மீ. தூரம் உள்ளது. இதனால் சிமெண்ட் சாலை அமைத்து தரவேண்டுமென பெ.சு.தி.சரவணன் எம்எல்எவிடம் மலைவாழ் மக்கள் கோரிக்கை வைத்தனர். அதனடிப்படையில் முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.1.3கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிக்கு டெண்டர் விடப்பட்டது. இந்த சாலையில் சில இடங்களில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலையில் வனத்துறையிடம் அனுமதி கேட்டு அதற்கான உத்தரவு வருவதற்குள் 20 மீட்டர் தூரம் சிமெண்ட் சாலை கடந்த 18ந் தேதி போடப்பட்டது.

இதையறிந்த வனத்துறை அதிகரிகள் அந்த கிராமத்திற்கு போடப்பட்ட சிமெண்ட சாலையை பொக்லைன் இயந்திரம் மூலம் பெயர்த்தெடுத்தனர். இச்சம்பவம் ஜவ்வாதுமலை வாழ் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு உத்தரின்பேரில் ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம் குட்டக்கரை ஊராட்சியில் மாவட்ட கலெக்டர் தெ.பாஸ்கரபாண்டியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த அவர் சிமெண்ட் சாலை போடும் பணியை தொடங்கிவைத்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கலசபாக்கம் தொகுதிக்குட்பட்ட குட்டக்கரை சாலையை முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தில் ரூ.1.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டது.

இந்த சாலை செல்லும் சில இடங்கள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. அனுமதி வரும் முன்னரே ஒப்பந்ததாரர் சாலையை போட துவங்கிவிட்டார். இதனால் வனத்துறையினர் போடப்பட்ட சிமெண்ட் சாலையை பெயர்த்தெடுத்துவிட்டனர்.

இப்போது வனத்துறை அனுமதி கிடைத்துவிட்டது. இதனால் மீண்டும் சிமெண்ட் சாலை பணி துவங்கப்பட்டுள்ளது.

இதனால் அரசுக்கு எந்த நிதி இழப்பும் இல்லை.

ஒப்பந்ததாரர் செய்த தவறால் அவரே சொந்த செலவில் சாலை போட்டு தர ஒப்புக்கொண்டுள்ளார். விரைவில் சிமெண்ட் சாலை போட்டு முடிக்கப்படும். இதனால் குட்டக்கரை பெரியவல்லி பாதிரி வட்டான்கோவிலூர் மஞ்சூர் சாரவல்லி உள்பட 10 கிராமங்களளின் மலைவாழ் மக்கள் பயன்பெறுவார்கள் என்றார்.

இந்த ஆய்வின்போது பெ.சு.தி.சரவணன் எம்எல்ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராமபிரதீபன், ஆரணி கோட்டாட்சியர் பாலசுப்ரமணியம், ஜவ்வாதுமலை ஒன்றிய குழு தலைவர் ஜீவாமூர்த்தி, ஒன்றிய குழு துணை தலைவர் மகேஸ்வரிசெல்வம், தாசில்தார் மனோகரன், ஆணையாளர் செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) ரேணுகோபால், ஒன்றிய செயலாளர் கேசவன், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் மலைவாழ் மக்கள் உடனிருந்தனர்.

thinaboomi.com தினபூமி, அக்டோபர் 22, 2024

# திருவொற்றியூர் பகுதியில் மழைவெள்ள பாதிப்பில் பணியாற்றிய அரசு அதிகாரிகளுக்கு மண்டலகுழு கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம்



**திருவொற்றியூர்.அக்.22**

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டல வார்டு குழுவின் 26ஆவது சாதாரணகூட்டம் மண்டல குழுத் தலைவர் தி.மு. தனியரசு தலைமையில் உதவி ஆணையர் புருஷோத்தமன் பொறியாளர்கள் சகுபர்உசேன் பாபு கார்த்திக் மற்றும் சிவில் சப்ளை உதவி ஆணையர் தாசில்தார்ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில்56அலுவலக தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப்பட்டது. முடிவில் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு பேசும்போதுகடந்தபுயல் மழையில்பாதிக்கப்பட்டதிருவெற்றியூர்மண்டலபகுதிகளில் களப்பணிகளுக்கு உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் நேரடியாக வருகை தந்த தமிழகதுணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின்மற்றும் அனைத்து அரசுதுறைஅதிகாரிகளுக்கும் இந்த மண்டல குழு தங்களது நன்றி பாராட்டுதலைதெரிவிக்கிறது என்று பேசினார்.

இதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு தந்தன. மேலும் திருவொற்றியூர்13 வது வார்டில்சாத்துமாநகர் காந்திநகர் தெருக்கள்மற்றும் உதயசூரியன்தெருக்கள் கிராமதெருகுறுக்குதெருக்களில் 75உயர்மின்கம்பத்துடன் மற்றும்மின்வடங்களுடன் சுமார் 30 லட்சம்ரூபாய் செலவில்தெருவிளக்குகள் அமைக்க கொண்டு வந்த தீர்மானத்திற்கு மாமன்ற திமுககவுன்சிலர்ஆர்.சுசிலாராஜா நன்றி கூறினார்.

இந்த வார்டில்சில மாதங்களாக கட்டப்படாமல் உள்ள சத்துணவு கூடம் எப்போது கட்டப்படும்என்றுபத்திரிகையாளர்கள் கேட்டபோது, சுமார் 10லட்சம் செலவில் மாமன்ற கவுன்சிலர்நிதியிலிருந்து கட்டுவதாகஇருந்த அந்த கட்டிடம் கட்டும்பணி நிறுத்தி வைக்கப்பட்டு தற்போது சுமார் 35லட்சம்செலவில் ஒருங்கிணைந்தசத்துணவுகூடம் கட்டரீ.டெண்டர் வைக்கப்படும் என்று மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு கூறினார்.

# அரும்பாக்கம் - அயனாவரம் பகுதியில் போதை பொருள் வைத்திருந்த 6 பேர் கைது

**சென்னை அக் 22-**

அயனாவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் அயனாவரம் பேருந்து நிறுத்தம் அருகே கண்காணித்து மெத்தம்பெட்டமைன் என்ற போதைப் பொருள் வைத்திருந்த 1.அருண் லெட்சுமணன், 2.பாலகணேசன், 3.ரஞ்சித், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 5 கிராம் எடை கொண்ட மெத்தம் பெட்டமைன், 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள மற்றொரு குற்றவாளியை காவல் குழுவினர் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட மேற்கண்ட 3 பேர் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், சென்னை பெருநகர காவல், அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் அரும்பாக்கம் திருவீதியம்மன் கோயில் எதிர்புறம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, அங்கு சட்டவிரோதமாக மெத்தம்பெட்டமைன் போதைப் பொருள் மறைத்து வைத்திருந்த 1.தீபக், அவரது மனைவி 2.டாலி மேத்தா, ஆகிய இருவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்த 0.80 கிராம் மெத்தம் பெட்டமைன் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் அரும்பாக்கம் காவல் நிலைய காவல் குழுவினர் 19.10.2024 அன்று அரும்பாக்கம், ஆர்.கே.நகர் கூவம் அருகே கண்காணித்து மெத்தம்பெட்டமைன் என்ற போதை பொருள் வைத்திருந்த முத்துக்குமரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1.37 கிராம் மெத்தம் பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மேற்கண்ட எதிரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி 3 வழக்குகளில் 6 நபர்கள் கைது செய்யப்பட்டு, மொத்தம் 7.17 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன் மற்றும் 8 செல்போன்கள் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பட்டினப்பாக்கத்தில் போலீசாரிடம் தகராறு செய்த ஜோடி மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு

**சென்னை அக் 22-**

சென்னை பட்டினபப்பாக்கம் லூப் சாலையில் போலீசாரிடம் தகராறு செய்த சந்திரமோகன் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்திரமோகன் மீது ஆபாசமாக திட்டுதல், அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தல், கொலை மிரட்டல், சட்டவிரோதமாக தடுத்தல் உட்பட 5 பிரிவுகளின் கீழ் மயிலாப்பூர் போலீஸ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சந்திரமோகனுடன் இருந்த அவரது தோழி தனலட்சுமியையும் போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை திட்டங்களில் பயன்பெற ஆதார் எண் கட்டாயம்

**சென்னை அக் 22-**

ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறை திட்டங்களில் பயன்பெற ஆதார் எண் கட்டாயம் என அரசிதழில் வெளியிடப்பட்டது. தொல்குடி, நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், CM Arise ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெற ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பழங்குடியின மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ரூ.1,000 கோடி மதிப்பில் தொல்குடி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி பெறலாம். CM Arise திட்டத்தில் தொழில் தொடங்க 35% வட்டி மானியத்துடன் ரூ.10 லட்சம் வரை கடன் பெறலாம்

# புழல் சிறை பெண் கைதி உயிரிழப்பு

**சென்னை அக் 22-**

புழல் பெண்கள் சிறையில் சுமார் 200க்கும் மேற்பட்ட பெண் கைதிகள் உள்ளனர். இதில் சென்னை கோடம்பாக்கம் வட்டத் தெரு ஹரி லுக் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் பாத்திமா கிறிஸ்டி(72). இவர் சென்னை சிபிசிஐடி போலீசாரால் மோசடி வழக்கில் கைதாகி, கடந்த ஜூலை மாதம் 1ம் தேதி புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.இவருக்கு வயது மூப்பு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டதால் இவரை கடந்த ஆகஸ்ட் 30ம் தேதி சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன் தினம் இரவு பரிதாபமாக இறந்து போனார். இது குறித்து தகவலின் பேரில் புழல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# சென்னை மாநகரை அழகுபடுத்தும் வகையில் சாலை தடுப்புகளில் 12,000 மலர் செடிகள்: மாநகராட்சி நடவடிக்கை

**சென்னை அக் 22-**

சென்னை மாநகரை அழகுபடுத்தும் வகையில், சாலை தடுப்புகளில் 12 ஆயிரம் மலர் செடிகளை நடும் பணியை வனத்துறையுடன் இணைந்து மாநகராட்சி தொடங்கியுள்ளது.

சென்னை மாநகரை சர்வதேச தரத்தில் உயர்த்து வகையில், சென்னை 2.0 திட்டத்தில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, சாலை சந்திப்புகளில் வண்ணமயமான நீரூற்று பூங்கா, விளையாட்டு திடல்கள், பூங்காக்கள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இதேபோல், மாநகரை தூய்மையாக பராமரிக்கும் வகையில், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தீவிர தூய்மைப் பணி, இரவு நேர தூய்மைப் பணி, பூங்காக்களில் தீவிர தூய்மைப் பணி, பேருந்து நிழற்குடைகளில் தூய்மைப் பணி, சுவரொட்டிகளை அகற்றுதல், சாலையோரம் நீண்ட காலமாக நிறுத்தப்பட்ட வாகனங்களை அகற்றுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக மாநகர சாலைகளில் உள்ள தடுப்புகளில் மலர்ச்செடிகளை நட்டு, மாநகரை வண்ணமயமாக்கி, கண்களுக்கு விருந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அதன்படி, வனத்துறை உதவியுடன் 12 ஆயிரம் மலர்ச்செடிகளை நட சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. அதற்காக பல்வேறு நர்சரிகளில் மலர்ச் செடிகளை சேகரிக்கும் பணிகளை மாநகராட்சி மேற்கொண்டு வந்தது. குறிப்பாக, பாரிஜாதம், பவளமல்லி, மகிழம், மந்தாரை உள்ளிட்ட 12 வகையான மலர்ச்செடிகளை சாலை தடுப்புகளில் நட திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், தினமும் சென்னை மாநகரில் மழை பெய்து வருகிறது.இப்போது செடிகளை நட்டால் அவற்றுக்கு இயற்கையாகவே நீர் கிடைக்கும், பராமரிப்புச் செலவும் குறையும். இதனால் சாலை தடுப்புகளில் மலர் செடிகளை நடும் பணியை வனத்துறையுடன் இணைந்து மாநகராட்சி தொடங்கியுள்ளது.

இப்பணிகளை நவ.15ம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த திட்டத்தின் கீழ், 12 ஆயிரம் மலர்ச்செடிகளை நட இருப்பதாக மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரம் அருகே பயிர்களுக்கு ஊட்டச்சத்து எனப்படும் பிளாஸ்மா வாட்டர் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் விழா

## விவசாய துறை அதிகாரிகள் பங்கேற்பு



**காஞ்சிபுரம், அக். 22 -**

காஞ்சிபுரம் அருகே 'பயிர்களுக்கு ஊட்டச் சத்து எனப்படும் 'பிளாஸ்மா வாட்டர்' தயாரிக்கும் நிலையத்தை வேளாண்மை - தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் நேற்று திறந்து வைத்தார்.

காஞ்சிபுரம் அடுத்த ஆராத்தி வேலூர் கிராமத்தில் விதைகள் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சேமிப்பு கிடங்கு செயல்பட்டு வருகிறது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்றிணைந்து பல்வேறு விவசாயத் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில், ஒரு கட்டமாக 'பிளாஸ்மா வாட்டர்' ரசாயனங்கள் இல்லாமல், இயற்கை விவசாய முறையில் அதிக மகசூல் பெறுவதற்காக, பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து என்று அழைக்கப்படலாம். நெற்பயிர் நடவு செய்தது முதல் அறுவடைக்கு தயாராகும் வரை இந்த 'பிளாஸ்மா வாட்டரை' பயிர்களுக்கு தெளிக்கலாம்.

தமிழகத்திலேயே செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூரில் இந்த 'பிளாஸ்மா வாட்டர்' தயாரித்து பயிர்கள் பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப் பட்டது. அதற்கு பிறகு ஆராத்தி வேலூர் கிராமத்தில் தான் செயல்படுத்தப் பட்டுள்ளது. அனைத்து விதமான பயிர்களுக்கும் இந்த 'பிளாஸ்மா வாட்டரை' பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறலாம். இந்த 'பிளாஸ்மா வாட்டரை' பயிர்களுக்கு பயன்படுத்துவது செயல் முறை மூலம் வேளாண்மைத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

முதலில் 10 செண்ட் நிலப் பரப்பில் கேழ்வரகு, தோட்டப் பயிர், நெற்பயிர் என, ஏதாவது ஒரு பயிரை நடவு செய்து அந்த பயிருக்கு 'பிளாஸ்மா வாட்டரை' பயன்படுத்துங்கள் இதன் முக்கியத்துவம் பற்றி பின் உங்களுக்கு தெரிய வரும் என, தோட்டக்கலை துறை அதிகாரிகளும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இன் நிகழ்ச்சியில் ஆராத்தி வேலூர் விதை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சேமிப்பு கிடங்கின் இயக்குனர்களான ஆறுமுகம், தீனதயாளன், வெங்கடேசன், லட்சுமணன், ராஜேஸ்வரன் மற்றும் கோவிந்தசாமி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் உடனிருந்தனர்.



**சென்னை மாநகராட்சி பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றும் பணிகள் வளசரவாக்கம் பகுதியில் நடைபெற்றது.**

# மகளிர் சுயஉதவிக்குழுக்கள் சார்பில் சென்னையில் தீபாவளி சிறப்பு சந்தை

**சென்னை அக் 22-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மகளிர் சுய உதவி குழுக்கள் சார்பில், 2 நாள் சிறப்பு சந்தை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்றது. மகளிர் சுய உதவி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, நகர பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் ஒவ்வொரு மாதமும், முதல் மற்றும் 3ம் வார சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், இயற்கை சந்தை நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இந்த மாதத்துக்கான இயற்கை சந்தை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த 19 மற்றும் 20ம் தேதிகளில் (சனி, ஞாயிற்றுக் கிழமைக் கிழமை) தீபாவளி சிறப்பு சந்தையாக நடைபெற்றது.

இதில், மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், திண்டுக்கல் சின்னாளப் பட்டு, மதுரை சுங்குடிச் சேலைகள், சேலம் இளம்பிள்ளை சேலைகள், விருதுநகர் காட்டன் புடவைகள், அரியலூர் வாரியங்காவல் காட்டன் புடவைகள், கோவை நெகமம் சேலைகள், நாமக்கல் வேஷ்டி சட்டைகள், திருப்பூர் டீசர்ட்டுகள், திருநெல்வேலி, தென்காசியில் தயாரிக்கப்படும் நைட்டிகள், ஈரோட்டில் தயாரிக்கப்பட்ட போர்வைகள், துண்டுகள் உள்ளிட்ட அனைத்து வகை துணிகளும் விற்பனை செய்யப்பட்டன.அதேபோல் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானியங்கள், காய்கறிகள், கீரைகள், பனை ஒலை பொருட்கள் போன்றவையும், மகளிர் சுய உதவிக்குழுவினரால் தயார் செய்யப்படும் பல் சுவை உணவுப் பொருட்களும் இந்த இயற்கை சந்தையில் இடம்பெற்றன. காலை 10 முதல் இரவு 8 மணி வரை நடைபெற்ற இந்த இயற்கை சந்தையில், ஏராளமான வாடிக்கையாளர்கள் பங்கேற்று, தேவைப்படும் பொருட்களை வாங்கி சென்றனர், என தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்ததுள்ளது.



**மதுரவாயல் தெற்குப்பகுதி,155வது வட்ட திமுக செயலாளர் ராதாசெல்வம் ஏற்பாட்டில் நடைபெற்ற வட்ட ஆலோசனைக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்த ஆலோசனைகளை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ வழங்கினார்.உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம், மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜூ, மாவட்ட அமைப்பாளர் வி.ராஜேஷ், இரா.பால்பாண்டியன்,மாவட்ட பிரதிநிதி எம்.எல். நாதன் கலந்து கொண்டனர்.**

# அரியலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**அரியலூர்,அக்.22-**

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், ''மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்'' கலெக்டர் பொ.இரத்தினசாமி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 308 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து கலெக்டர் அவர்களால் பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, தனித்துணை கலெக்டர் (ச.பா.தி) சுமதி மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் வழிப்பறி செய்த 2 பேர் கைது

**சென்னை அக் 22-**

சென்னை, எம்.ஜி.ஆர் நகர், அண்ணா மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் சோனு, என்பவர் ஓட்டலில் வேலை செய்து வருகிறார். சோனு 18 ந் தேதி அன்று இரவு எம்.ஜி.ஆர் நகர், பாரதி நகர் மெயின் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு வந்த 2 நபர்கள் மேற்படி சோனுவை வழிமறித்து, அவதூறாக பேசி கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ.1,000/- பறித்துக்கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து சோனு எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், எம்.ஜி.ஆர். நகர் போலீசாரால் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, மேற்படி வழிப்பறி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.யுவராஜ், 2.கார்த்திக், ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி யுவராஜ் மீது 11 குற்ற வழக்குகளும், கார்த்திக் மீது சில குற்ற வழக்குகளும் உள்ளது தெரிய வந்தது. மேற்கண்ட இருவரும் எம்.ஜி.ஆர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் ஆவர்.

கைது செய்யப்பட்ட 2 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.



**சென்னைஅண்ணாநகர்வட்டாரவளமையத்திற்குட்பட்டமாற்றுத்திறன்மாணவர்களுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் அம்பத்தூர் பெருந்தலைவர் காமராசர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைப்பெற்றது. மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தலைமையில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் உணவு வழங்கினார்.**

# நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,அக்.22-**

வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 194 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் செவித்திறன் பாதிக்கப்பட்ட 02 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.6000%- மதிப்பிலான காதொலி கருவிகளை கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில் முதுநிலை மண்டல மேலாளர் சிவப்பிரியா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள்; பலர் கலந்து கொண்டனர்.

# பார்சல் நிறுவனத்தில் லேப்டாப் திருடிய ஊழியர் கைது

**சென்னை அக் 22-**

சென்னை, திருவல்லிக் கேணி பகுதியில் வசித்து வரும் முகமது ஆசிப், என்பவர் இராயப்பேட்டை பகுதியில் ஒரு தனியார் பார்சல் சர்வீஸ் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

**லேப்டாப்**

இந்த பார்சல் சர்வீஸ் நிறுவனத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் 3 லேப்டாப் அடங்கிய ஒரு பார்சல் திருடு போனது தெரியவந்தது.

**திருட்டு**

ராயப்பேட்டை காவல் நிலைய காவல் குழுவினர் தீவிர விசாரணை நடத்தி மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட பார்சல் நிறுவன ஊழியர் ராம்சத், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1லேப்டாப் மற்றும் திருடிய இரண்டு லேப்டாப்களை விற்பனை செய்து அதன் மூலம் பெறப்பட்ட பணம் ரூ.60,000 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி ராம்சத் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



**திருச்சிமாவட்டமக்கள்குறைதீர்கூட்டத்தில்கலெக்டர்மா.பிரதீப்குமார்பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.**

